# கருப்பு வெள்ளை

Karuppu vellai

மறைக்கப்பட்ட உண்மைகளின் உரிமைக் குரல்..!

கருப்பு : 01 | 2021 ஜூலை - 21 | வெள்ளை : 03




# கற்பிட்டியிலும் ஆரம்பமானது பொதுமக்களுக்கான கோவிட் - 19 தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம்

(எம்.எச்.எம்.எஸ்)

(விரிவான செய்தி 02ம் பக்கத்தில்)




## கற்பிட்டியிலிருந்து படகின் மூலம் கடலுக்கு சென்ற மூன்று மீனவர்கள் வீடு திரும்பவில்லை

### மன்னார் பியர் கடற்கரையில் ஒதுங்கியுள்ள படகு

(எம்.எச்.எம்.எஸ்)



கற்பிட்டியிலிருந்து கடந்த 09 ம் திகதி கடலுக்கு சென்ற வன்னி முந்தலைச் சேர்ந்த அலிக்கான் (26), நபீல்(45) மற்றும் மணல் தோட்டத்தைச் சேர்ந்த நிசங்க (21) ஆகிய மூவரும் இன்றுடன் 13 நாட்கள் சென்றும் கரைக்கு திரும்பவில்லை. எனினும் இவர்கள் பயணம் செய்த 7088 இலக்கமுடைய இயந்திர படகு மன்னார் பியர் பகுதியில் 17ம் திகதி கரை ஒதுங்கியுள்ளதாக மன்னார் பொலிஸ் மூலம் தகவல் கிடைத்துள்ளது. என இவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.


## மாகாண சபைத் தேர்தல் அடுத்த வருடத்தின் முதல் காலாண்டில்

### நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ

தேர்தலுக்கு தயாராகும்படி நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷ அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளார்.

அன்மையில் அலரிமாளிகையில் இடம்பெற்ற முன்னாள் மாகாண சபை பிரதிநிதிகளை சந்தித்துக் கலந்துரையாடிய போது அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.அதன்படி அடுத்த வருடத்தின் முதல் காலாண்டில் மாகாண சபைத் தேர்தலை நடத்த அரச உயர்மட்டம் ஆலோசனை நடத்திவருவதாக மேலும் அந்த தகவலில் தெரிவிக்கப்பட்டுள்டுள்ளது.

## கொவிட் 4 ஆவது அலையை நோக்கி நகருகிறது இலங்கை!



இலங்கை கொரோனாவின் நான்காவது அலையின் முதல் பாதியை நெருங்கியுள்ளதாக இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர் வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன தெரிவித்துள்ளார். கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே. இத்தகவலை அவர் தெரிவித்துள்ளார்.

கருப்பு வெள்ளை
Karuppu vellai
மறைக்கப்பட்ட உண்மைகளின் உரிமைக் குரல்..!
கருப்பு: 01 2021 ஜுலை –21 வெள்ளை: 03

**அன்பார்ந்த வாசகர்களுக்கு...**
**அஸ்ஸலாமு அலைக்கும்.... வணக்கம்....**

**எல்லாப் புகழும் இறைவனுக்கே.. இறைவனின் பெரும் அருளால் மூன்றாவது 'கருப்பு வெள்ளை' பத்திரிகையின் மின்னிதழ் ஹஜ் பெருநாள் தினத்தில் தியாகத்திருநாள் வாழ்த்துக்களுடன் வெளியிடுவதில் அலாதி இன்பம் 'அல்ஹம்துலில்லாஹ்'**

**உண்மையில் ஒருவர் எதிர் கொள்ளக் கூடிய மிகப்பெரிய தோல்வி என்பது, முதல் முயற்சியே சாத்தியப்படாமல் போவதல்ல மாறாக அந்த அசாத்தியத்திற்கு அப்பாலும் போதுமான முயற்சி செய்யாமல் இருத்தலாகும்**

**வாழ்வின் சில உண்மைகளை நாம் காலம் கடந்துதான் உணர்ந்து கொள்வோம் அந்த உணர்வானது எங்கள் எதிர் காலத்தில் ஒரு பெரிய பங்களிப்பை ஆற்றுகிறது. சரியாக முடிவெடுக்கும் திறமைகளையும் எமக்குள் அது வேரூன்றச் செய்து விடுகிறது. கடந்த காலம் என்பது இறந்ததாகவே. இருக்கட்டும். அதிலிருந்து நல்ல அனுபவங்களை மாத்திரம் எம்மோடு சேர்த்துக் கொள்வோம். எங்கள் வாழ்க்கை பயணம் இன்னும் முடிவடையவில்லை. ஆக நாங்கள் தொடர்ந்தும் நகர்ந்து கொண்டே. இருக்க வேண்டும். அப்போதுதான் நீங்கள் உயிருடன் இருப்பதனை சிலர் ஏற்றுக் கொள்வார்கள். எனவே ஒவ்வொரு வாய்ப்பையும், ஒவ்வொரு முயற்சியையும் உங்களுக்கு எப்படி சாதகமாக மாற்ற முடியும் என்று சிந்தியுங்கள் இன்று நீங்கள் பெறும் வாய்ப்பு, நாளை நீங்கள் கற்பனை செய்ய முடியாததை அடைவீர்.**

**வாசகர் நெஞ்சங்கள் அனைவருக்கும். தியாகத்திருநாளான 'ஹஜ்' பெருநாள் வாழ்த்துக்களை மீண்டும் தெரிவித்துக் கொண்டு. இன்ஷா அல்லாஹ் மீண்டும் நான்காவது. இதழில் வந்து உங்களுடன் கலக்கும் வரை....**

**எம்.எச்.எம் சியாஜ்**
**பிரதம ஆசிரியர்.**

## கற்பிட்டியிலும் ஆரம்பமானது...

(முன்பக்க செய்தி...)

**கற்பிட்டி** பிரதேச செயலகப் பிரிவின் 28 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் உள்ள 30 வயதிற்கு மேற்பட்ட சகலருக்கும் கோவிட் 19 பையிஸர் வகை தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் 2021.07.20 ம் திகதி கற்பிட்டி பிரதேச செயலக பிரிவுகளிலும் உள்ள சுமார் 12 பாடசாலைகள், மற்றும் வைத்தியசாலைகளில் காலை 09 மணி தொடக்கம் பிற்பகல் 04 மணிவரை கற்பிட்டி சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தினால் சுமார் 36,292 தடுப்பூசிகள் ஏற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது.

அன்றைய தினம் முஸ்லிம்களின் அரபா நோன்பு தினமாக காணப்பட்டபோதும், இத்தடுப்பூசியினை பெற்றுக் கொள்வதற்கு ஏனையவர்களை விடவும் நோன்பு நோற்றவர்கள் அதிக ஆர்வம் காட்டியமையயும் அவதானிக்க முடிந்தது.

மேலும் 30 வயதிற்கு மேற்பட்ட பொதுமக்களுடன் சேர்ந்து பாடசாலை ஆசிரியர்களும் வரிசையில் காத்திருந்து இத் தடுப்பூசியினை ஏற்றிக்கொண்டனர்.

இவ் வேலைத்திட்டத்தில் கற்பிட்டி பிரதேசத்தில் உள்ள கிராம சேவையாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக காரியாலய உத்தியோகத்தர்கள் மற்றும் முப்படையினரும் இணைந்து கொண்டு செயற்பட்டதும் குறிப்பிடதக்கது.







(புகைப்பட உதவி - றிஸ்வி ஹுசைன்-FB)

# கற்பிட்டி அல் – அக்ஸா தேசிய பாடசாலையின் இன்றைய நிலை




**கற்பிட்டி** கோட்ட மட்டத்தில் சுமார் 30 பாடசாலைகளுக்கு மேல் நிர்வாக கட்டமைப்பு காணப்படுவதுடன் இதில் ஒரே ஒரு தேசிய பாடசாலையாக கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலை காட்சியளித்துக் கொண்டிருந்தது என்பது சிறப்பம்சமாகும்.

இவ்வருடத்தில் கற்பிட்டி கோட்டமட்டத்தில் உள்ள மூன்று பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. அதன்படி தமிழ்மொழி பாடசாலையான நுரைச்சோலை முஸ்லிம் மகா வித்தியாலயம், சிங்கள மொழி பாடசாலையான கற்பிட்டி நிர்மல மகா வித்தியாலயம், இரு மொழி பாடசாலை ஆன மாம்புரி மகா வித்தியாலயம் ஆகும்.

அரசினால் தேசிய பாடசாலையாக தரம் உயர்த்தப்படுவது பாடசாலையின் பௌதீக வளம். இணைப்பாடவிதானங்கள் மற்றும் ஏனைய கல்விச் செயற்பாடுகளின் வளர்ச்சியின் அடிப்படையிலாகும்.

இவ்வாறு சகல வளங்களையும் கொண்டு தரம் உயர்த்தப்பட்டு சிறப்பான வளர்ச்சியை கண்டு வந்த கற்பிட்டி அல் - அக்ஸா தேசிய பாடசாலை சில காலமாக கட்டிட அபிவிருத்தியை தவிர ஏனைய அபிவிருத்திகளில் சரிவை கண்டு வருவது மிக கவலைக்குரிய விடயமாகும். சில தசாப்தங்களுக்கு முன்னர் சகல வளங்களையும் தன்னகத்தே கொண்டு எவ்வித வளர்ச்சியும் அடையாது **உறங்கும் ராட்சதன்** என பெயர் பெற்ற பிரேசில் நாட்டைபோல் கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையும் தற்போது காணப்பட்டு வருகின்றது.

அரசினால் தேசிய பாடசாலைகளுக்கு கிடைக்கக்கூடிய பல சேவைகள் கிடைக்க பெற்ற போதிலும் நிர்வாக அடிப்படையிலான தேவை சரியான முறையில் நிவர்த்தி செய்யப்படாமையும் இதன் வளர்ச்சிக்கு பாரிய. இடையூராகுமா...?

( தொடரும்.....)

**எம்.எஸ் – கற்பிட்டி.**

# முற்றுப் பெறாத 'செமட செவன' 'சபா–மர்வா' வீட்டுத்திட்டம்

## கண்டு கொள்ளாத பிரதேச வீடமைப்பு அதிகாரிகள்..!

(எமது விஷேட செய்தியாளர்)

**கற்பிட்டி** புதுக்குடியிருப்பு கிராமத்தில் கட்டி முடிக்கப்படாத ' சபா - மர்வா' " செமட செவன" வீடமைப்புத் திட்டத்தின் இன்றைய நிலையை படங்களில் காணலாம். பெறும் பான்மையான வீடுகள் கூரை மட்டத்திற்கும் இன்னும் சில வீடுகள் அத்திவாரத்துடனும் சகல பகுதிகளும் பற்றைக் காடுகள் வளர்ந்தும் காணப்படுகின்றது. இவ்வீட்டுத்திட்டம் இவ்வாறு இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளது பற்றி இப்பகுதி அரசியல் தலைமைகள் மற்றும் வீடமைப்பு அதிகார சபையின் அதிகாரிகள் என சகலரும் மௌனமாக இருப்பது ஏன்? இந்த வீடமைப்புத்திட்டத்தின் முடிவுதான் என்ன? கற்பிட்டி புதுக்குடியிருப்பு பகுதி அரசியல் வாதிகளே.. மற்றும் வீடமைப்பு அதிகார சபையின் கற்பிட்டி பிரதேச அதிகாரிகளே...இது உங்கள் கவனத்திற்கு...









படங்கள் - MS Media Network

# கருப்புவெள்ளை மின்னிதழின் ஹஜ் பெருநாள் வாழ்த்துக்களுடன் இணைந்து கொள்ளும் வர்த்தக உள்ளங்கள்...

























# கருப்புவெள்ளை மின்னிதழின் ஹஜ் பெருநாள் வாழ்த்துக்களுடன் இணைந்து கொள்ளும் வர்த்தக உள்ளங்கள்...






















"கருப்புவெள்ளை" வாராந்த மின்னிதழ்
பத்திரிகையில் உங்கள்
வண்ண விளம்பரங்களை
பிரசுரிக்க
**தொடர்புகளுக்கு**
**077 47 48 407**

# நீத்தார் பெருமை



## 02 இவ்வாரம்

**நினைவு கூறப்படக் கூடியவர்கள் எத்துறையினை சார்ந்தவராகவும் இருக்கலாம்**



**மர்ஹூம் அல்ஹாஜ் எம்.எச்.மொஹமட் (உஹது)**

கற்பிட்டியில் வாழ்ந்து மறைந்தும் மக்கள் மனங்களில் என்றும் நினைவில் நின்றுகொண்டிருக்கும் மாமனிதர்களின் நினைவலைகளை மீட்டிப் பார்க்கும் களம் இது. இதில் நினைவு கூறுவதற்கு பொறுத்தமானவர்கள் என நீங்கள் என்னும் கற்பிட்டியில் வாழ்ந்து மறைந்த மனிதர்கள் பற்றிய சிறு குறிப்பையும் அவரின் புகைப்படம் ஒன்றையும் உடன் எமது வட்சப் இலக்கமான **077 47 48 407** ற்கு உடன் அனுப்பிவைக்கவும்.

**இவ்வாரம்** கற்பிட்டியில் வாழ்ந்து அரசியலில் தடம்பதித்து மறைந்த **மர்ஹூம் அல்ஹாஜ் எம்.எச்.மொஹமட் (உஹது)** பற்றிய நினைவலைகளை மீட்டிப் பார்க்கும் சந்தர்ப்பத்தினை **வாராந்த மின்னிதழ்**' பத்திரிகையான "**கருப்புவெள்ளை**" வாசகர்களுக்கு வழங்கியுள்ளது.

அதன் அடிப்படையில் **மர்ஹூம் அல்ஹாஜ் எம்.எச்.மொஹமட் (உஹது)** பற்றிய புகைப்படங்கள், கவிதைகள், கட்டுரைகள், விவரணங்கள் என உங்களிடம் புரையோடிக் கிடக்கும் தகவல்களை எமது வட்சப் இலக்கமான **077 47 48 407** ற்கு உடன் அனுப்பிவையுங்கள்.

அவைகள் ஆவணங்களாக தொகுத்து வெளியிடுதற்கான ஏற்பாடுகள் "**கருப்புவெள்ளை**" '**மின்னிதழ்**' ஊடாக இடம்பெறும்.

# அதி தீவிர போதைப் பொருட்களின் அடிமைகள் அவதானம்



**ஐஸ்** போன்ற போதைப் பொருட்களுக்கு அடிமையாகி பாதிப்புக்குள்ளானவர்கள் மன நோயாளிகளாக மாறியுள்ளனர். சுய இன்பத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஆண்கள், பெண்களின் உள்ளாடைகளைத் திருடுவது...

பாதையால் செல்லும் பெண்கள், சிறுவர்களுக்கு பாலியல் இடையூறுகள் மேற்கொள்வது போன்ற செயற்பாட்டில் இறங்கியுள்ளனர்.

நோயாளிகளாக மாற்றம் பெறும் தருனத்தில் உள்ள சகல போதைப் பொருள் அடிமைகளும் திருட்டுச் செயல்களில் ஈடுபட ஆரம்பத்துள்ளனர்.

பெண் தலைமைத்துவ குடும்பங்கள் தங்கள் வீட்டுத் தேவைகளுக்காக வளர்க்கும் கோழி,ஆடு மற்றும் சிறு தோட்ட பயிர்களை. இத் திருடர்கள் அபகரித்துச் செல்கின்றனர். இவ்வாறான அடிமைகளை வெறும் உடல் சுகங்களுக்காக பயன்படுத்தாது வீட்டை விட்டே விரட்டி நல்ல நிம்மதியான குடும்ப வாழ்வின் பக்கம் பயணிக்க பெண்களுக்கு வழிகாட்டப்பட வேண்டும்.

இவர்களிடம் பள்ளிவாசல்கள் நிதி வசூலிப்பதை முற்றாகத் தடுக்க வேண்டும்.

ஊரில் உள்ள உங்கள் பிள்ளைகளும் திருந்த வேண்டுமாக இருந்தால் சீர் திருத்த முகாம்களுக்கு கொண்டு செல்லுங்கள்...

பாடசாலை செல்லும் சிறுவர்கள் வழியில் பல நூறு போதை அடிமைகளை ஊடறுத்தே பாடசாலை சென்று வர நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றார்கள். வெத்திலை முதற்கொண்டு எந்த போதைப் பொருளும் பாவிக்காத மற்றும் விற்பனை செய்யாதவர்கள் சகல சமூக நலன்சார் அமைப்புக்களுக்கும் முன் மொழியப்பட வேண்டும் என்ற இறுக்கமான சட்டங்களை உருவாக்குவது காலத்தின் தேவையாகும்.

**வேதனையுடன்**
**பஸால் இஸ்மாயீல்**

# கவி முற்றம்..

## எம்.எச்.எம்.எஸ்

# என்னை விழுங்கும் பொய்களின் தொகை



ஒரு கவிதை
அதன்
மொழிபெயர்ப்பில்
வாசிப்பவனின்
நடமாட்டத்தோடு
நகர வேண்டும்.....
உதட்டோர
சிரிப்போடும்
உள்ளோடும்
ரணத்தோடும்
ஓட வேண்டும்....

அனுபவ
மனபாரத்தை
மத்திமமாக
மாற்றிவிடும் யுக்தி
உன் - படைப்பில்
பரிணாமிக்க
வேண்டும்
அப்படியான
ஒரு கவிதை
என்னை கொள்ளத்
தொடர்கிறது....

அதன் தொடர்தலில்
பயந்து சாகிறேன்
பைத்தியமாகிறேன்
கொஞ்சம்
கொஞ்சமாக
என் குரல்வலைக்குள்
சுவாசம் இல்லாமல்
போகிறேன்
சரிகிறேன்
விழுகிறேன்
வீழ்ந்து
மட்டையாகிறேன்...

நீண்ட
வருஷமாக
இப்படியே தொடர்கிறது
பழமை வாதங்கள்...
இப்படித்தான்
இருக்கின்றது
ஒரு கூட்டத்தின்
நிசப்தம் குமட்டும்
சப்தம்
நீண்டு கொண்டே
நீட்டிக்கொண்டே
செல்கின்றது
குறைகளின்
குறுக்கு
விசாரணைளை
இப்படித்தான்
உனதும் எனதுமான
நமது பருவங்களின்
பொம்மலாட்டங்கள்
இருட்டில்
மூட்டி இருட்டிலே
பற்றிக்கொள்கின்றன..!



நஸீம் ரூமி
புத்தளம்.

# நான் இருக்கமாட்டேன்..!

என் உணர்வுகளை புரிந்து கொண்ட - உனக்கு
மனதில் உள்ள சுமைகளை புரிந்து கொள்ள
முடியவில்லை ..
என் மனச்சுமையை எப்போது - நீ திறந்து பார்த்து
அதை புரிந்து கொள்ளப் போகின்றாய் ...
எனக்கு புரியவில்லை - நீ
என்னுடன் இருக்கும் நாட்கள் அதைப் பற்றி
யோசிப்பதுமில்லை .... கேட்பதுமில்லை ....

நீ எல்லாவற்றையும் புரிந்து கொண்டு
என்னோடு வாழ நினைக்கும் போது ....
நான் - உன் அருகில் இருக்க மாட்டேன் ....!!

எம்.டி.என்.எஸ்

# நான்காவது மனிதன்..!

அதிகமாக பேச - நினைப்பதும்
அதிகமாக பார்க்க - நினைப்பதும்
நாம் உண்மையாக - நேசிப்பவர்களை
மட்டுமே.....!!!
மற்றவர்கள் பொறாமை - படும் அளவுக்கு
வாழனும்னு அவசியம் - இல்ல.....
பெத்தவங்க பெருமை - படும் அளவுக்கு
வாழ்ந்தாலே போதும்.....!!!
அடிக்கடி பார்க்கின்ற எல்லோரையும்
நேசிக்க - முடியாது....!!!
ஆனால் நேசிக்கின்ற ஒருவரை...!!!
அடிக்கடி பார்க்க முடிவதில்லை...!!!
நாம் யார் மீது - அன்பு அதிகமாக
காட்டினாலும் - அவர்களுக்கு
நாம் சிறு காலங்களுக்கு - பின்னர்
நான்காவது மனிதர்தான்.....!!!



➡ எம்.என்.எம். அப்ரான்
கற்பிட்டி

# நட்பு எனும் நகை

சொந்தம் சொன்ன செந்தூரங்கள்
இப்போதில்லை..!
மலர் மீது வீற்றிருந்த பனித்துளிகளை
தாங்கி நின்ற இதழ்களெல்லாம்
விழி மீது நீர்த் துளிகளை...!
ஏழ்மை எனும் குடிலினுள்ளே
அனாதை எனும் பெயருடனே
ஒளி இழந்த விழியுடனும்...!
உணர்விழந்த உள்ளத்துடனும்
தொலைந்து போன சொந்தத்தை
தொலைவினில் தேடுது உள்ளம்..!
கடத்தி விட்ட காலங்கள்
கண்ணீருடன் ஆனாலும்..!
பன்னீர் தெளிக்க
பாதையோரம் பார்த்திருக்கிறேன்..!
நட்பு எனும் நகை என்னில்
நம்பிக்கையுடன் நடப்பட்டிருப்பதால்...!





➡ எம்.எஸ்.எம். சிபாக் - கற்பிட்டி

# கற்பிட்டி பிரதேச செயலக பிரிவில் கோவிட் 19 தடுப்பூசி வழங்கும் 2021.07.20ம் திகதி வேலைத்திட்டத்தில் கற்பிட்டி அல்-அக்ஸா தேசிய பாடசாலையில் தடுப்பூசி ஏற்றிக் கொண்டவர்களின் காட்சிப் படங்கள்.









(புகைப்பட உதவி - றிஸ்வி ஹுஸைசன்-FB)



கருப்புவெள்ளை பத்திரிகையின் பிரதம ஆசிரியர்



கற்பிட்டி ஜும்ஆ பள்ளிவாசல் தலை-



கற்பிட்டி பிரதேச சபையின் எதிர் கட்சி தலைவர்





உங்கள் ஆலோசனைகள், கருத்துக்கள், விமர்சனங்கள், படைப்புக்கள், ஆக்கங்கள், எழுத்துக்கள், உங்கள் கிராம செய்திகள் எதுவானாலும் தரமானவைகளுக்கு களம் அமைத்து தர நாம் தயார் ஆக்கம் எழுத்துருவிலோ.. அல்லது குரல் பதிவாகவோ.. இருக்கலாம் உடன் எமது வட்சப் இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.

0774748407

இவ் கருப்புவெள்ளை மின்னிதழ் கற்பிட்டியைச் சேர்ந்த எம்.எச்.எம்.சியாஜ் என்பவரால் 2021.07.21 ல் வெளியீடப்பட்டது.